DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 128/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3- செங்கோடன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு முதுமை காரணமாக வீட்டிலிருந்து வருகிறேன் ஆஜர் எதிரி எனது இரண்டாவது மனைவி ஆவார்ஆ.சா.1மீனாட்சி மகள் ஆவார். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 5 .8 .2024 ஆம் தேதி அன்று மாலை சுமார் 4 மணி அளவில்ஆ.சா.1மீனாட்சி என்னை பார்ப்பதற்காக எனது வீட்டிற்கு வந்திருந்ததாகவும், அன்றைய தினம் இரவு அவர் அங்கேயே தங்கி விட்டதாகவும்,அதிகாலை சுமார் ஒரு மணி அளவில் எனது இரண்டாவது மனைவி முருகா மற்றும் எனது மகள் தனுஸ்ரீ ஆகியவர்கள் மீனாட்சி இடம் வந்து தகராறு செய்ததாகவும், அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தனுஸ்ரீ ஒரு கூர்மையான முனை உள்ள கம்பியால் மீனாட்சி பின் தலையில் அடித்ததாகவும், முருகாம்பாள் சாப்பாட்டு தட்டை எடுத்து மீனாட்சியின் தலையில் அடித்ததாகவும், இதில் மீனாட்சிக்கு மொக்கை காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி சம்பவத்தை பார்த்த நான் விளங்காட்டி விட்டதாகவும், பின்னர் மறுநாள் காலையில் மீனாட்சி சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி மனைவி என்பதால் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 128/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4- முருகன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு மளிகை கடை வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில்லை, சுமார் 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் நான் காடப்பநல்லூர் ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். எதற்காக கையெழுத்து செய்தேன் என்று எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.,ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 05.08.2024 ஆம் தேதியன்று எங்கள் ஊரில் இருக்கும் செங்கோடனின் முதல் மனைவியின் மகள் மீனாட்சிக்கும் இரண்டாவது மனைவி முருகம்பாளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக கேள்விப்பட்டு, அதனை விசாரிப்பதற்காக 08.08. 2024 ஆம் தேதியன்று நான் செங்கோடனின் வீட்டுக்கு சென்றதாகவும் அப்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து என் முன்னிலையில் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காகவும், எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 128/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- வீரப்பன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் முத்து கவுண்டனூரில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் காலையில் நான் எங்கள் ஊரில் உள்ள காட்டில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். எதற்காக அந்த கையெழுத்து செய்தேன் என்று எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 05.08. 2024 ஆம் தேதியன்று செங்கோடன் வீட்டில் அவரது முதல் மனைவியின் மகளுக்கும், இரண்டாவது மனைவிக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் அது குறித்து விசாரிப்பதற்காக போலீசார் 08.08.2024 ஆம் தேதியன்று காலையில் செங்கோடன் வீட்டிற்கு வந்திருந்ததாகவும், நான் அப்போது செங்கோடன் வீட்டில் இருந்ததாகவும், அங்கு வந்த போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காகவும், எதிரிக்கு ஆதரவாகவும். அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.